

# 20

# மஹப்பதுர் ரஸூல்




**"உங்களில் ஒருவருக்கு அவரது தந்தை, அவரது குழந்தைகள், ஏனைய மக்கள் அனைவரையும் விட நான் மிக அன்பானவராக ஆகும் வரை அவர் உண்மையான ஈமான் கொண்டவராக மாட்டார்"** என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (புஹாரி)

அல்லாஹ், உலகிலுள்ள ஒவ்வொன்றினதும் சீரான இயக்கத்துக்காக பல்வேறு உந்து சக்திகளை ஏற்படுத்தியுள்ளான். அவற்றுள் அன்பு என்ற உந்து சக்தியும் ஒன்றாகும். பெற்றோர் பிள்ளைகளுக்கிடையிலான அன்பு சீரான குடும்ப அமைப்புக்கும்; ஆசிரியர் மாணவர்களுக்கிடையிலான அன்பு சீரான கற்றலுக்கும் வழிவகுக்கின்றது. சமூக அமைப்பில் தலைமைத்துவத்துக்கும் உறுப்பினர்களுக்குமிடையிலான அன்பு சமூகத்தின் வெற்றிக்குக் காரணமாய் அமைகிறது. இதுபோன்றுதான் முஸ்லிம் சமூகம் கைக்கொள்ள வேண்டிய அன்பாக **மஹப்பதுர் ரஸூல் எனப்படும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதான அன்பு** அமைந்திருக்கின்றது.

நபித் தோழர்களான ஸஹாபாக்கள் தம் உயிரிலும் அதிகமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நேசித்தார்கள். குறைஷித் தலைவர்களில் ஒருவரான அபூ ஸுப்யான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் எதிரியாய் இருந்த காலத்தில்கூட முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

பற்றிக் குறிப்பிடும்போது ‘‘முஹம்மதின் தோழர்கள் முஹம்மதை நேசிப்பது போன்று மனிதர்களில் எவரும் மற்றொரு மனிதனை நேசிப்பதை நான் காணவில்லை’’ என்கிறார். ஸஹாபாக்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மீது வைத்த உண்மையான அன்பிற்கு பல சம்பவங்களை உதாரணமாக முன்வைக்கலாம்.

### சம்பவம் 1

ஒருமுறை மக்கா காபிர்கள் ஸைத் பின் தஸினா ரழியல்லாஹு அன்ஹு என்ற ஸஹாபியை கழுமரத்தில் ஏற்றிக் கடுமையாக சித்திரவதை செய்து கொண்டிருந்தனர். அப்போது அவரிடம் ‘‘ஸைதே, நாம் உம்மை விட்டு விடுவோம். பதிலாக முஹம்மதைப் பிடித்து இவ்வாறு துன்புறுத்துவோம். அதை நீர் விரும்புவீரா?’’ எனக் கேட்கப்பட்டது. அதற்கு அவர் ‘‘இல்லை, ஒருபோதும் இல்லை. அவர் இருக்கின்ற இடத்தில் அவரது காலில் ஒரு முள் தைப்பதைக் கூட நான் விரும்புவதில்லை’’ என்றார்.

### சம்பவம் 2

உஹத் யுத்தத்தின்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதாக மதீனாவில் ஒரு வதந்தி பரவியது. இதைக் கேள்விப்பட்ட ஓர் அன்ஸாரிப் பெண்மணி உஹத் களத்தை நோக்கி ஓட ஆரம்பித்தார். போகும் வழியில் அவரிடம் உங்களது கணவன், தந்தை, சகோதரன் கொல்லப்பட்டனர் என சொல்லப்படுகிறது. ஆனால் அப்பெண்மணி அதைப் பொருட்படுத்தாமல் ‘‘நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உயிருடன் இருக்கின்றாரா?’’ என்று கேட்டவாறு களத்தை நோக்கி ஓடினார். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உயிருடன் இருப்பதாகக் கூறப்பட்டது. அவ்வார்த்தையில் திருப்தியடையாத அப்பெண், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்ணால் காண வேண்டும் என்று வேண்டினார். பின்னர் அவள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அழைத்துச் செல்லப்பட்டார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்டதும், ‘‘அல்லாஹ்வின் தூதரே உங்களை உயிருடன் கண்டபின் எனக்கேற்பட்ட இழப்புக்கள் எல்லாம் சர்வ சாதாரணமானதே’’ என்றார்.



சம்பவம் 3

ஒரு மனிதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து ''அல்லாஹ்வின் தூதரே! எனது உயிரை விடவும் எனது பிள்ளைகளை விடவும் எனது சொத்துக்களை விடவும் நீங்களே எனது நேசத்துக்குரியவர். நான் வீட்டில் இருக்கும் போது உங்கள் நினைவு வந்தால் உங்களை வந்து பார்க்காமல் என் மனம் நிம்மதியடையாது. உங்களது மரணத்தையும் எனது மரணத்தையும் எண்ணிப்பார்க்கும் போது நான் அறிந்துள்ளதன்படி நீங்கள் சுவர்க்கத்தில் நபிமார்களின் சபையில் இருப்பீர்கள். ஆகவே நான் சுவர்க்கம் நுழைந்தால் என்னால் உங்களைக் காண முடியாமல் போய்விடுமோ என அஞ்சுகிறேன்'' என்றார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பதில் கூறவில்லை. அப்போது அல்லாஹ்,

**யார் அல்லாஹ்வுக்கும் (அவன்) தூதருக்கும் கீழ்படிந்து நடக்கிறார்களோ அவர்கள் அல்லாஹ்வின் அருளைப்பெற்ற நபிமார்கள், ஸித்தீகீன்கள் (சத்தியவான்கள்) ஷுஹதாக்கள் (உயிர்த்தியாகிகள்) ஸாலிஹீன்கள் (நற்கருமங்களுடையவர்கள்) ஆகியவர்களுடன் இருப்பார்கள் - இவர்கள் தாம் மிக்க அழகான தோழர்கள் ஆவார்கள்.** (4: 69) என்ற அல்குர்ஆன் வசனத்தை அருளினான்.

ஸஹாபாக்களைப் போலவே அவர்களைத் தொடர்ந்த தாபிஈன்கள், தபஉத் தாபிஈன்கள் காலங்களிலும் அதற்குப் பின் உள்ள காலங்களிலும் வாழ்ந்த நல்லடியார்கள் அனைவரும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நேசிப்பவர்களாகவே இருந்துள்ளனர். ''அவர்களிடம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றிக் கூறப்படும்போது அவர்களது உடல் நிறம் மாறிவிடும். கண்கள் கண்ணீர் சிந்தும்'' என தாபிஈன்கள் பற்றி வரலாற்று நூல்களில் எழுதப்பட்டுள்ளன. ஹதீஸ்துறை இமாம்கள் எவ்வித உலக ஆதாயமும் இன்றி ஹதீஸ்களை ஒன்று திரட்டுவதற்காகப் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்ததற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது கொண்டிருந்த அன்பே பெரும் காரணமாக அமைந்தது.



நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஏன் அன்புவைக்க வேண்டும் என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் சிலவற்றை நோக்குவோம்.

1. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உலக மக்கள் அனைவருக்கும் ஓர் அருட்கொடையாய் இருக்கின்றமை.

   **''(நபியே) உங்களை உலகத்தாருக்கு ஓர் அருளாகவேயன்றி நாம் அனுப்ப வில்லை.''** (21: 107)

2. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன் உம்மத்தினரை அதிகமாக நேசித்தமை

   **''நம்பிக்கையாளர்களே! நம்முடைய ஒரு தூதர் நிச்சயமாக உங்களிடம் வந்திருக்கிறார். அவர் உங்களில் உள்ளவர்தான். உங்களுக்கு யாதொரு துன்பம் ஏற்பட்டு நீங்கள் கஷ்டத்துக்கு உள்ளாகிவிட்டால் அது அவருக்கு மிக்க வருத்தமாக இருக்கும். அவ்வளவு தூரம் உங்கள் மீது அன்புடையவர். அன்றி உங்களுக்கு நன்மையை பெரிதும் விரும்புகின்றவராகவும் நம்பிக்கையாளர்களாகிய உங்கள் மீது மிக்க கருணையும் அன்பும் உடையவராகவும் இருக்கின்றார்.''** (9: 128)

3. மறுமையில் அனைவருக்காகவும் அல்லாஹ்விடம் ஷபாஅத் செய்யும் அங்கீகாரம் பெற்ற ஒரே ஒருவராக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உள்ளமை.

4. அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நேசிப்பதும் அவரைப் பின்பற்றுவதும் நிபந்தனையாக இருக்கின்றமை.

   **''நபியே கூறுங்கள் நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாய் இருப்பின் என்னைப் பின்பற்றுங்கள் அல்லாஹ் உங்களை நேசிப்பான்.''** (3: 31)

5. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நேசிப்பதன் மூலம் அவர்களுடன் சுவர்க்கத்தில் இருக்கும் உயர்ந்த பாக்கியம் கிடைக்கின்றமை.

   ''மனிதன் தான் நேசித்தவர்களுடனேயே மறுமையில் இருப்பான்.''

6. ஈமான் பூர்த்தியாவதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மீது அன்பு வைப்பது நிபந்தனையாக இருக்கின்றமை.

   **''நிச்சயமாக நம்பிக்கையாளர்களுக்கு அவர்களின் உயிர்களைவிட நபிதான் முன்னுரிமை பெற்றவராவார்.''** (33: 6)

7. மக்கள் நேர்வழி பெற வேண்டும் என்பதற்காக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொண்டிருந்த பேரவாவும் அதற்காக அவர்கள் பட்ட கஷ்டங்களும்.

மேலே கூறப்பட்ட காரணங்களை நோக்குகின்றபோது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நேசிப்பது முழு முஸ்லிம் உம்மத்துக்கும் உள்ள கடமையாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதுள்ள அன்பை நாம் வெளிப்படுத்துவதற்கு இஸ்லாம் பல வழிமுறைகளைக் கற்றுத் தருகிறது.

1. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது அதிகமாக ஸலவாத்துச் சொல்லுதல்.
2. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்பத்தவர்களாகிய அஹ்லுல் பைத்தினரை நேசித்தல்.
3. நபித்தோழர்களாகிய ஸஹாபாக்களை நேசித்தல்.
4. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நேசிக்கக் கூடியவர்களை நேசித்தல்.
5. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஸுன்னாவைப் பின்பற்றுதல்.
6. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஸீராவைப் படித்தல்.
7. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் உண்மையான தூதர் என்பதை உலகிற்கு எடுத்துரைத்தல்.
8. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு எதிராக வருகின்ற சவால்களை முறியடித்தல்.
9. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உம்மத்தினராகிய முஸ்லிம்கள் மத்தியில் ஐக்கியத்தைப் பேணுதல்/ ஏற்படுத்தல்.
10. வாழ்வில் அனைத்து விடயங்களிலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முன்மாதிரியாகக் கொள்ளல்.
11. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன்னைப் பின்பற்று பவர்களிடமிருந்து எவற்றை எதிர்பார்த்தார்களோ அவற்றை நிறைவுசெய்ய உழைத்தல்.
12. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பிறர் தூற்றுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்தாதிருத்தல்.

மேலே தரப்பட்ட வழிமுறைகளை முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதுள்ள அன்பின் வெளிப்பாடாக நாம் மேற்கொள்கின்றபோது அவை ஒவ்வொரு தனி மனிதனின் வெற்றிக்கும் உம்மத்தின் வெற்றிக்கும் காரணமாய் அமையும்.

**ஆகவே நாமும் ஸஹாபாக்களைப் போன்று எமது உயிரிலும் மேலாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது அன்பு வைப்போம்.**

**பயிற்சி**

*அ. பொருத்தமான விடையைத் தெரிவு செய்து இடைவெளிகளை நிரப்புக.*

*(உயிரை விடவும், மஹப்பதுர் ரஸூல், ஷபாஅத், அன்பின், சவால்களை)*

1. *நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பரஸ்பர .................. அடிப்படையில் முஸ்லிம் சமூகத்தைக் கட்டியெழுப்பினார்கள்.*
2. *நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மீது செலுத்தப்படும் அன்பு ................... எனப்படுகிறது.*
3. *மறுமையில் அனைவருக்காகவும் அல்லாஹ்விடம் .................. செய்யும் அங்கீகாரம் பெற்ற ஒரே ஒருவர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாவார்.*
4. *நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு எதிராக வருகின்ற .................. முறியடிப்பது முஸ்லிம் மீது கடமையாகும்.*
5. *நாம் எமது ...................... அதிகமாக முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது அன்பு வைக்க வேண்டும்.*

*ஆ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

1. *ஸஹாபாக்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது வைத்த அன்பை அபூஸுப்யான் அவர்கள் எவ்வாறு வர்ணித்தார்?*
2. *குறைஷியர் ஸைத் பின் தஸினாவிடம் கேட்ட கேள்வியையும் அவர் அதற்கு வழங்கிய பதிலையும் குறிப்பிடுக.*
3. *நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதான அன்பை வெளிப்படுத்தும் ஐந்து வழிமுறைகளைக் குறிப்பிடுக.*